விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 2 முறை 2 இதழ் 220
யாழ்ப்பாணம் புதன்கிழமை 18-9-1985

## புதுடில்லியில் உயர்மட்ட ஆலோசனை

(புதுடில்லி)
ஈழ தேசிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் புதுடில்லியில் நேற்று இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி மற்றும் உயர் அதிகாரிகளுடன் இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தினர்.

இக் குழுக்களுக்கும் பாரத அரசு அதிகாரிகளுக்கும் இடையே சென்னையில் நடைபெற்ற பேச்சுக்களின் தொடர்ச்சியாக நேற்றைய பேச்சுக்கள் அமைந்திருந்தன.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை, பிரதமர் திரு ராஜீவ் காந்தியுடனான ஈழ தேசிய விடுதலை முன்னணியினரின் சந்திப்பு விபரம், உத்தியோகபூர்வமாக வெளியிடப் படவில்லை.

## இன்று அமைச்சரவை கூடாது

(கொழும்பு)
அமைச்சரவைக் கூட்டம் இன்று புதன்கிழமை நடைபெறமாட்டாதென அறிவிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு வாரமும் இன்றைய தினத்தில் அமைச்சரவை கூடுவது தெரிந்ததே. (ரா-மா)

# இலங்கை இனப்பிரச்னை ராஜீவ் நிச்சயம் தீர்ப்பார்!

# 'தொண்டா' பூரண நம்பிக்கை!!

(இ. பெஞ்சமின்)
இனப்பிரச்னை தொடர்பாக நடைபெறும் பேச்சுவார்த்தைமூலம் கிடைக்கும் தீர்வை தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் (புளட்) பரீட்சித்துப்பார்க்கத் தயாராக இருப்பதாக கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

திரு தொண்டமான் கடந்த இரு வாரகாலமாக தமிழ் நாட்டில் தங்கியிருந்தார். அக் காலத்தில் த. வி. கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அமிர்தலிங்கம், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகச் செயலதிபர் திரு உமா மகேஸ்வரன், தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார்.

நேற்று அமைச்சர் திரு தொண்டமான் நாடு திரும்பியபின்னர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கூட்டணியின் பிரமுகர்களான திரு தர்மலிங்கம், திரு. ஆலாலசுந்தரம் ஆகியோர் கொலைசெய்யப்பட்ட விஷயம் கூட்டணித் தலைமைப் பீடத்தை ஆட்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு சம்பவம்: டிக்ஸிற் - சம்பந்தமூர்த்தி தொலைபேசி ஆலோசனை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்ட சபையின் முன்னாள் தலைவர் திரு. ஆர். சம்பந்தமூர்த்தி, இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு டிக்ஸிற்றுடன் தொலைபேசிமூலம் நேற்றுத் தொடர்பு கொண்டு, பாடசாலை மாணவர் இருவரை கொமொண்டோப் பொலிசார் சுட்டுக் கொலைப்பட்ட விஷயம் பற்றித் தெரிவித்துள்ளார்.

நேற்று செங்கலடியில் வந்த 15-20 ஆயுதப்படை வீரர்

(5ம் பக்கம் பார்க்க)

## மன்னார் சென்ற சரக்குரயில் அநுராதபுரத்தில் நிறுத்தம்

(கொழும்பு)
அரசாங்கம் மன்னார் மாவட்டத்திற்கு உணவு, எரிபொருட்களை அனுப்பி வைக்க எடுத்த முயற்சி தமிழ்த்தீவிரவாதிகளின் நடவடிக்கையினால் நேற்றுப் பாதிப்புற்றுள்ளதாக அரசவட்டாரம் தெரிவித்தது.

இந்த மாவட்டத்திற்கான உணவு, எரிபொருட்களை ஏற்றிக் கொண்டு சென்ற ரயில் வண்டி அநுராதபுரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது

(8 ம் பக்கம் பார்க்க)

## பலத்த சோதனைக்குள்ளான நெடுந்தீவு பிரயாணிகள்

(நயினாதீவு)
நெடுந்தீவுக்குச் சென்ற பிரயாணிகள் கடற்படையினரால் பலமணிநேரம் தடுத்து நிறுத்தப்பட்டுச் சோதனையிடப்பட்டனர்.

குறிகட்டுவானிலிருந்து நேற்று முன்தினம் நெடுந்தீவு நோக்கிச் சென்ற படகில் பிரயாணம் செய்த எல்லா ஆண்களும் நயினாதீவுத் துறைமுகத்தில் இறக்கிவிடப்பட்டு பலமணி நேரத்துக்குப் பின்னரே பிரயாணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனராம்.

செய்தித்தாள் ஒன்றுக்கு உரிமைகோரப்படாததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

## பஸ்சேவை ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் வ. பி. போ. சபையின் பாடசாலைபஸ் சேவை முற்றாக ஸ்தம்பித்துள்ளது. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்நகரிலிருந்து முந்தைய பன்கட்டுக்கு ஒரு பஸ்சும், வவுனியாவுக்கு மூன்று பஸ்களும், மன்னாருக்கு ஒருபஸ்ஸும் மட்டுமே சேவையில் ஈடுபட்டன.

(8-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளைச் சம்பவ எதிரொலி— யாழ். ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சை முக்கிய கருவிகளுக்கு கொழும்பில் தடை!

(ஏ வி மாணிக்கம்)
யாழ் ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை நிலையத்தில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவத்தின் எதிரொலியாக, வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இயற்கையாகக் காற்றுமூலம் சத்திரசிகிச்சைக்கு உபயோகிக்கும் இரு ஈ எம் ஓ 'இயந்திரங்கள் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரம் கவலை தெரிவித்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் யாழ் ஆஸ்பத்திரி வெறும் பெயரளவிலேயே இயங்கிவருகின்றது. போக்கு வரத்துக் கஷ்டங்களால் அத்தியாவசிய

8ம் பக்கம் பார்க்க

## மானிப்பாயிலிருந்து கொடும்பாவி வந்தது!

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் வாழ் பொதுமக்கள் நேற்று கொடும்பாவி ஒன்றைச் செய்து ஊர்வலமாக எடுத்துச்சென்று யாழ் மத்திய பஸ் நிலையம் முன்பாக எரித்தனர்!

மேளம் முழங்க நேற்றுக் காலை பத்து மணியளவில் மானிப்பாய் மருதடிசந்தியிலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வலத்தில் கொடும்பாவியை சைக்கிளில் வைத்து உருட்டிய

(5-ம் பக்கம் பார்க்க)

## 9 லொறிகளுடன் எரியுண்ட 17 தமிழர்கள்!

(சென்னை)
"வன்முறைகளினால் பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களில் பட்டினியால் வாடும் தமிழர்களுக்கு உணவுப்பொருட்களை ஏற்றிவந்த ஒன்பது லொறிகள் குண்டர்களால் கடத்தப்பட்டதோடு அதிலிருந்த பதினேழு தமிழர்களும் லொறியுடன் வைத்துக் கொழுத்தப்பட்டனர்"

இவ்வாறு இலங்கையிலிருந்து அகதியாக தமிழ்நாடு சென்றுள்ள விக்கிரமசிங்கம் என்ற இளைஞர் தமிழ் நாட்டில் செய்தியாளருக்கு தெரிவித்

(5-ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகளைப் பார்க்கச் செல்லும்— பெற்றோர் 23ம் திகதி கொழும்பில் நிற்கவேண்டும்

(எம் ரி சந்திரகுமார்)
வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களின் பெற்றோரும் யாழ் பிரஜைகள் குழு அங்கத்தவரும் அடங்கிய குழுவொன்று இம்மாதம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலையில் இளைஞர்களைச் சென்று பார்ப்பதற்கு கொழும்பு மேலதிகாரிகளினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ் பிரஜைகள்குழு அங்கத்தவர்கள் இருவரும் பெற்றோர் ஒருவரும் தேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை எதிர்வரும் 23ம் திகதி

(5-ம் பக்கம் பார்க்க)

## அந்த இரு சடலங்கள்

(மட்டக்களப்பு)
நேற்று முன்தினம் செங்கலடியில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இரு பாடசாலை (உயர் வகுப்பு) மாணவர்களான சதீஸ் காமாட்சி சுந்தரம் 16 வயது, பாரதிதாசன் நல்லையா (16 வயது) ஆகியோரின் சடலங்கள் ஆஸ்பத்திரிப் பிரேத சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இன்று பிற்பகல் மூன்றுமணி வரை சடலங்கள் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கும் என்றும், அதன்பின்னர் பெற்றோர் பொறுப்பேற்கா விட்டால் தகனம் செய்யப்படும்

(5-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

சகல வசதியுடன் கூடிய கல்வீடும், வளவும் உடன் விற்பனைக்குண்டு விபரங்கட்கு; ஆ. சுந்தையா, நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். 775

## தேவை

Typist - Clerk பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. விண்ணப்பிக்கவும். Institute of Technical Studies, வட்டு மேற்கு (V. C சந்தோரி முன்பாக), வட்டுக்கோட்டை. 776

## தேவை


பண்டத்தரிப்பில் பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கு உகந்த வீடு, பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கு உகந்த வீடு, பிரதான வாகன போக்குவரத்து வீதியில் தேவை. தொடர்பு: விளம்பர இல 757 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 757

## பயிற்சி

டிராஸ்மென் பயிலுனர், ரிவி, ரேடியோ, எலக்ரிக்கல் வயரிங், தொழிட்நுட்பம், தட்டச்சு, சுருக்கெழுத்து NCE பரீட்சைக்கான ஆங்கில வகுப்புக்கள் 19-9-85-ல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு, தொடர்பு கொள்க. பதிவாளர். Institute of Technical Studies V. C. முன்பாக வட்டுக்கோட்டை. 778

---

## "புஸ்பா குறூப்"




- கட்டிடம் அமைத்தல்
- மரவேலைகள்
- தரை றெருசோ வேலைகள்

மற்றும்
LORRY TRANSPORT SERVICE,
கொன்கிறீற் மிக்ஸர் இயந்திரம் வாடகைக்கு விடுதல்,
கட்டிட வர்ணம் அடித்தல்

முதலியன நம்பகமான முறையில் ஒடர்கள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

சின்னப்பு தம்பிஐயா,
மனைவி புஷ்பா,
கட்டிட ஒப்பந்தகாரர்.

66/13, பிறவுண்றேட், 5-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (701)

---

# நாளை ஆரம்பம்!

காலை 8-00 மணிக்கு

# A/L 86
# DAY CLASS

எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

விபரங்கட்கு:

# NEW MASTER INSTITUTE

BMC Lane, Jaffna.

---

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்

## அறிவித்தல்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் நடைபெற இருப்பதால். தேர்தல் நடாத்துவதற்கான வாக்காளர் இடாப்பு 30-9-85ல் உள்ளபடி தயாரிக்கப்படவுள்ளது: புதிதாக சங்கத்தில் அங்கத்துவம் பெற விரும்புகிறவர்கள் 30-9-85க்கு முன்னர் ரூபா ஒன்று (ரூ. 1/-) செலுத்தி முழுப்பங்கொன்றைப் பெறுவதன்மூலம் வாக்காளர் இடாப்பில் தமது பெயரை இடம்பெறச் செய்து சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலை நடத்த ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்.
ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்.

16-9-85,
ஊர்காவற்றுறை. 769

---

சாவகச்சேரி மாவட்ட
நீதிமன்றம்

பின்னுறுதிக் கட்டளை

## அறிவித்தல்

சாவகச்சேரி வடக்கு கிராம்புவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து கார்த்திகேசு தர்மலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா சொத்துவிடயத்தில்.

மரணமெய்தியவர்
நாகமுத்து கார்த்திகேசு நடராசா, கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி

மனுதாரர்

வழக்கு இல; 232/ ரி

எதிராக

1. நாகமுத்து கார்த்திகேசு, சுப்பிரமணியம்,
2. நாகமுத்து கார்த்திகேசு கிருஷ்ணசாமி, இருவரும் கிராம்புவில், சாவகச்சேரி.

—எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற் சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது:

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்காகக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

ஆ. குணநாயகம்,
பதிவாளர்.

தயாரித்தவர்கள்:
பரராஜசிங்கமும்,
அம்பிகைபாலனும்,
மனுதாரின்
சட்டத்தரணிகள். 768

---

கலர் பிலிம்
சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ரூடியோ

---

## வட்டு.மாணவர் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)
வெலிக்கடைச்சிறை உண்ணாவிரதிகளுக்கு ஆதரவு தெரிவித்து வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் அண்மையில் மௌன ஊர்வலமொன்றை நடாத்தினர்

பலகலோகங்கள் சகிதம் ஆரம்பமான இவ்வூர்வலத்தில் 200 க்கு மதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர்; இங்கு விரிவுரையாளர்களும் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது.

ஊர்வலத்தின் முடிவில் மாணவர்கள் அடையாள உண்ணாவிரத மொன்றையும் மேற்கொண்டார்கள். (ச)

---

## ஒரு பணிவான வேண்டுகோள்

எனது 84 சிறீ 316 இலக்கமுடைய ஹொண்டா C. D 200 மோட்டார்சைக்கிள் கடந்த12 8-85இரவு இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டது அடுத்த நாள் கொண்டுவந்து தருவதாகக் கூறியவர்கள் ஒரு மாதத்துக்கு மேலாகியும் தரவில்லை. இனிமேலாவது இதைக் கொண்டுவந்து தருமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

விக்ரர் யோசவ்

"மரியவாசா" சமனகை, பண்டத்தரிப்பு. (777)

---

## காணி விற்பனவு

யாழ்ப்பாணம், மானிப்பாய் ஒட்டுமடம் சந்தியில் மூன்று கடைக் கட்டிடங்கள் காலியான நிலையில் உடன் விற்கப்படும்.

கொடுக்கப்படும் வட்டி விகிதங்கள்


| | | | |
|---|---|---|---|
| மூன்று மாதம் | 18% | தொடக்கம் 20% | வரை |
| ஆறு மாதம் | 21% | தொடக்கம் 23% | வரை |
| ஒரு வருடம் | 22% | தொடக்கம் 25% | வரை |

விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.,
3, நவீன சந்தை, (மேல்மாடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23698

---

## அந்தியேட்டி அழைப்பு

டாக்டர் சு. வேலும்மயிலும் (ஜே. பி.)



அளவாய் டாக்டர் சு. வேலும்மயிலும் (ஜே பி.) அவர்களுடைய அந்தியேட்டிக் கிரியைகள் 20-9-85 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி மக்கள்,
டாக்டர் த. துரைராசா.
தெய்வ வாசா,
அளவாய். (773)

---

## 31-ம் நாள் 'நினைவஞ்சலி

19-09-85

அமரர் செல்வி நடராசா செல்வபாக்கியம்

பிறப்பு: 19-09-54 இறப்பு: 20-08-85



கருவில் திருவொடு தோன்றி கல்வியில் சிறந்து உருப்பொலிய உயர்வுடன் செல்வியாய் வாழும் காலை ஆண்டவன் அனுப்பிய அழைப்பை ஏற்று, அயர்வற மயர்வற குரு மகாராஜ்ஜின் திருவடிச் சித்தையில் தம்மை ஆழ்த்தி விநாயகப் பெருமான் விமலபாதம் 20-8-85ல் எய்திப் பேரின்பமுற்ற பெருங்குணச் செல்வி செல்வபாக்கியத்தின் அஞ்சலி நிகழ்ச்சிக்கும், அந்தியேட்டி வைபவத்திற்கும் வீட்டு கிருத்தியத்திற்கும் மகேஸ்வரபூசைக்கும் வருகை தந்து எங்களுடன் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஆசீர்வாதம் வழங்கும்படி பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்
தாயார் திருமதி நடராசா பூபாக்கியமும்,
புதல்வரும், மருமக்களும்.

"இராஜபதி",
பிள்ளையார் கோவிலடி, வயாவிளான். 758

### ● 'சுவாப்போ'க்களை வேட்டையாட

# அங்கோலாவினுள் தென்னாபிரிக்க துருப்புகள்

# மீண்டும் ஊடுருவல்!

லுவாண்டா, செப்–17

**தென்னாபிரிக்க இராணுவத் துருப்புகள் 'சுவாப்போ' விடுதலை இயக்கத்தினரை வேட்டையாடும் நடவடிக்கையில் மீண்டும் குதித்துள்ளனர். நேற்று அங்கோலாவிலுள்ள நமீபியாவின் வடபகுதியில் தென்னாபிரிக்கத் துருப்புகள் பெருமளவில் பிரவேசித்தன. இந்த ஊடுருவலில் பலர் கொல்லப்பட்டிருக்கலாமென அறிவிக்கப்பட்டது.**

நமீபியாவின் சுதந்திரத்திற்காகப் போராடிவரும் தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் ஸ்தாபனமான 'சுவாப்போ' இயக்கத்தினர் மீது மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது ஊடுருவல் இதுவென்று கூறப்பட்டது.

இதற்கு முன்னர் நடந்த ஜூன் மாதம் அங்கோலாவினுள் தென்னாபிரிக்கத் துருப்புகள் பிரவேசித்து 60சுவாப்போ போராளிகளைக் கொன்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்கப் படைகளின் நேற்றைய ஊடுருவலை அந்நாட்டின் இராணுவத் தளபதி ஜெனரல் கொன்ஸ்டன்ற் பியூம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அங்கோலாவின் வடக்கில் உள்ள நமீபியாப் பகுதியில் 'சுவாப்போ' தளங்களை நிர்மூலமாக்குவதே தமது பணியென்று அவர் குறிப்பிட்டார். இத்துடன் சுவாப்போ இயக்கத்தினர் விரைவில் அந்த வடபகுதி நகரில் முக்கிய கட்டிடங்கள் மற்றும் தென்னாபிரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைத் தாக்கப்போவதாகத் தகவல் கிடைத்துள்ளது எனவும். இதனைத் தொடர்ந்தே இந்த ஊடுருவல் நடத்தப்படுவதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

நமீபியா அங்கோலாவின் வடபகுதியில் தென்னாபிரிக்காவுக்கு மேற்கே அமைந்துள்ளது. நமீபியா ஒரு தனிப் பிரதேசமாக இருக்கின்றபோதிலும் அது தொடர்ந்து தென்னாபிரிக்க அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. இக்கட்டுப்பாட்டிலிருந்தும் விடுபட்டு நமீபியாவை ஒரு சுதந்திர நாடாக்கவே 'சுவாப்போ' இயக்கம் போராடிவருகின்றது. இந்த இயக்கம் அண்மையில் புதுடில்லியில் இடம்பெற்ற சாமன்வெல்த் நாடுகளின் மாநாடொன்றில் ஒரு விடுதலை ஸ்தாபனமாக அங்கீகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கி)




### ● பயங்கரவாதத் திட்டங்களின்

# முனைப்பை முறிப்பதே

# நம் அனைவரதும் கடமை

## — ராஜீவ்

புதுடில்லி. செப். 17

பயங்கரவாதத் திட்டங்களின் முனைப்பை முறிக்க வேண்டியது நம் எல்லாரினதும்-குறிப்பாக பத்திரிகையாளர்களின் மிக முக்கிய கடமையாகும் என்று இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புப் போராட்டத்தில் தகவல் சாதனங்களின் பங்குபணி என்ற கருத்தரங்கொன்றில் உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு உரையாற்றினார். இக்கருத்தரங்கு புதுடில்லியில் நேற்று இடம்பெற்றது.

திரு. காந்தி மேலும்பேசியதாவது!

"வேறுபாடுகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கலாம் என்ற கோட்பாட்டில் இந்தியக் குடியரசு அமைந்துள்ளது இதன் அடிப்படையிலேயே பஞ்சாப் பிரச்னைக்கும் அண்மையில் தீர்வு காணப்பட்டது.

ஆனால் இத்தீர்வு குறித்து தேச விரோத சக்திகள் மகிழ்ச்சியோ, அல்லது திருப்தியோ அடையவில்லை. பயங்கரவாத திட்டங்கள், செயல்கள் மூலம் எத்தகைய நன்மையான முடிவுகளையும் நாம் வெற்றி காண முடியாது

பயங்கரவாத சக்திகளின் திட்டங்களின் முனைப்பினை முறியடிக்கவேண்டியது நம் எல்லோரினதும் குறிப்பாகதகவல் சாதனங்களின் முக்கிய பணியாகும்" என்றார் (கி)

## 7 அப்பாவி விவசாயிகள் கொலை:

# பேரு இராணுவத் தளபதி வேலை நீக்கம்!

லண்டன், செப். 17

தென் அமெரிக்க நாடான பேருவில் இராணுவத் தளபதி உட்பட மூன்று இராணுவ உத்தியோகத்தர்கள் வேலை நீக்கஞ் செய்யப்பட்டனர்

தெற்கு அந்தீஸ் பகுதியில் ஏழு அப்பாவி விவசாயிகளின் கொலைகளுக்குப் பொறுப்பாளிகள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் வேலை நீக்கஞ் செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் இரு இராணுவ அதிகாரிகளும் அவர்களது சாரதியும் ஏழு அப்பாவி விவசாயிகளை கொலை செய்தனர் என்றும். பின்னர் அவர்களின் சடலங்கள் ஒரு ஒதுக்குப்புறப்பகுதியொன்றில் இருக்கக் காணப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கொலைகள் குறித்து பேரு ஜனாதிபதி திரு. கார்ஸியா விசேட இராணுவ புலன்விசாரணை ஒன்றை நடத்தும்படி பணித்திருந்தார். இவ்விசாரணையின்முடிவிலேயே பேரு இராணுவத்தளபதி உட்பட ஏனைய மூன்று அதிகாரிகள் வேலைநீக்கஞ்செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி கார்ஸியா கடந்த மாதமே பேரு ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். இவருக்கு முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் இராணுவ வன்முறைக்குக் காரணமாக இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## சீனாவில் முதல் தடவையாக மோட்டார் கார் பந்தயம்

[பீக்கிங்]

சீனாவில் முதல் தடவையாக சர்வதேச மோட்டார் கார் ஓட்டப்போட்டி ஒன்று ஆரம்பமாகியுள்ளது.

பீக்கிங்கிற்கு 900 மைல்கள் வடக்கிலுள்ள ஷூஹாஸ் என்ற இடத்திலேயே இப்போட்டி இடம்பெறுகிறது. இந்த இடம் முன்பு வெளிநாட்டவர்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்ட பகுதியாக இருந்தது. இங்கு மக்கள் மிகவும் பின்தங்கியவர்களாகவே இருக்கின்றனர். நவீன கார்களைக்கூட அவர்கள் கண்டிருக்கவில்லை. இந்நிலையில் நேற்றைய மோட்டார்கார் ஓட்டப்போட்டி அவர்களை மிகவும் குதூகலத்தில் ஆழ்த்தியுள்ளது.

கார்கள் வீதிகளில் உறுமிக்கொண்டு சென்றவேளை விபரமறியாது நடுவீதிகளையும் கடந்து சென்று குதூகலித்தனர் ஆனல் பந்தய ஏற்பாட்டாளர்கள் அவர்களை அவ்வாறு செய்வதைப் பின்னர் தடுத்தனர்.

மேற்கத்தைய பாணிகளைத் தழுவிவரும் மக்கள் சீனக் குடியரசில் இந்த கார் ஓட்டபந்தயமும் நேற்று முதல் தடவையாக இடம்பெற்றது. [இ]

## லோங்கோவால் பலியான மாவட்டத்தில் ராஜீவ்!

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி நேற்று பஞ்சாப்பில் மூன்று இடங்களில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டார்.

பிரதமர் காந்தி சன் ஹர்ச்சன் சிங் லோங்கோவால் கொல்லப்பட்ட சங்குருவா மாவட்டத்துக்கும் நேற்றுச் சென்று பொதுக்கூட்டமொன்றை நடத்தினார்.

இங்கு திரு. காந்தி சென்ற ஹெலிகொப்டருக்குப் பாதுகாப்பாக 4 ஹெலிகொப்டர்கள் சென்றன தன்னியக்க ரைபிள்களுடன் கமாண்டோக்கள் கண்காணிப்பில் ஈடுபட்டனர். சிறுவர் சிறுமிகள் உட்பட இக்கூட்டத்துக்கு வந்தவர்கள் பல இடங்களிலும் கடுமையாகச் சோதனையிடப்பட்டனர்.

சங்குருவா மாவட்ட எல்லைப் பகுதிகள் கண்காணிப்புக்குட்பட்டிருந்தன குண்டு துளைக்கமுடியாத கண்ணாடிக் கூண்டினுள் நின்றே திரு. காந்தி இக்கூட்டத்தில் உரையாற்றினார். [இ]

## பிரிட்டிஷ்-ரஷ்ய வெளியேற்றப் படலம் தொடருகின்றது

(லண்டன்)

பிரிட்டன்-ரஷ்யா ஆகியவற்றின் ராஜதந்திரிகள் வெளியேற்றப்படலம் தொடர்ந்து இடம்பெறுகின்றது

பிரிட்டன் 24 ரஷ்ய ராஜதந்திரிகளை கடந்த வாரம் வெளியேற்றியது இதற்குப்பதிலடியாக ரஷ்யா25 பிரிட்டிஷ்காரரை மஸ்கோவிலிருந்து மூன்று தினங்களுக்கு முன்னர் வெளியேற்றியது.

தொடர்ந்த இந்நடவடிக்கைகளுக்குப் பதிலடியாகப் பிரிட்டன் நேற்று மேலும் ஆறு சோவியத் அதிகாரிகளை பிரிட்டனிலிருந்து வெளியேற்றியது இவர்களில் இருவர் ராஜதந்திரிகளாவர்.

சோவியத் ரஷ்யா இந்த நடவடிக்கையை வெகுவாக கண்டித்துள்ளது. ஆனல் பிரிட்டிஷ் தரப்பில் தற்போது இந்த வெளியேற்றல் படலத்துக்கு முடிவுகட்டி ரஷ்யாவுடன் புதிய உறவுகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. [இ]

## அரசியல் கொலைகளை உடன் நிறுத்துக!

### லண்டன் அமைப்பு கோரிக்கை

(லண்டன்)

தமிழீழத்தில் விடுதலை என்ற போர்வையில் இனம் தெரியாதவர்களால் நிகழ்த்தப்படும் அரசியல் படுகொலைகள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்று 'ஈழம் சொலிடாரிட்டி கம்பைன்' (ஈழம் ஒருமைப்பாட்டுக் கூட்டமைப்ப) வேண்டுகோள் விடுத்துள்ளது.

லண்டனிலுள்ள வை எம் சி ஏ. கட்டிடத்தில் உள்ள "மகாத்மா மண்டபத்தில்" ஈழம் விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது

அக்கூட்டத்திலேயே மேற்குறிப்பிட்ட முடிவு எடுக்கப்பட்டது

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ). தமிழீழ மக்கள விடுதலை முன்னணி (ஈ. பி ஆர் எல். எவ்) ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளட்), தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (என் எல். எவ் ரி,] ஆகிய விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ மா]

**மணிவாக்கு**

கோணல் புத்தியுடையாரிடமிருந்து கடவுள் வெகு தொலைவிலேயே இருக்கிறார்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## ஆண்டவனே! ஒளிவேண்டும்; ஒலி வேண்டாம்

ஜனாதிபதிகளும் ஜெனரல்களும் போர்முனையில் இறப்பதில்லை படுக்கையிலே அமைதியாக ஆவிதுறப்பர்" என்பது ஒரு பொதுவான வாசகம்.

இக்காலத்தில்பிரான்ஸின் ஜனாதிபதி டிகால் இதற்குப் புறநடையெனலாம்.

பேராண்மையில் முன்னேற்றங்கண்ட இக்காலத்தில், கெரில்லா யுத்தம்தானும் இந்த உண்மையை மாற்ற முடியவில்லை.

முற்காலத்தில் அரசர்களும், ஆட்சித்தலைவர்களும் போர்முனையில் முன்னணி வகித்து கடும்போர் புரிந்ததாக வரலாறு கூறுகிறது.

இங்கிலாந்தின் ஜோர்ஜ் மன்னர் இருவரும், அமெரிக்காவின் ஆபிரகாம்லிங்கனும் படைத்தலைவர்களாக பராக்கிரம சாதனைகள் நிகழ்த்தினர். கடற்படை வீரன் நெல்சன் வெற்றியில் மரணமடைந்தது உலகறிந்தசெய்தி.

இன்றைய போர்முறை ராணுவத்தினரையே பலியெடுக்கிறது. தளபதிகள், தலைவர்கள் தங்கள் குளிர் ஊட்டப்பட்ட மாளிகைகளில் கருத்துப்பரிமாறுதல் சாதாரணம்.

எப்படியாவது ஆலும், போரும், போர் முடிவில் சமாதானமும், அவர்களின் பெரும் பொறுப்பென்பதை சிலவேளைகளில் மறப்பதால் உயர்ச்சிக்குப்பதில் வீழ்ச்சியே விளைவு.

இலங்கையில் இன்று தேவைப்படுவது போர் அல்ல, போர் நிறுத்தமே. இதனை உணர வல்லவர் பாதுகாப்பு அமைச்சர் லலித்.

இரண்டு வருடம் அடுத்தடுத்து ஜனாதிபதி ஜெயவர்த்தனா போரில் மடிந்த வீரர்கள் சார்பாக தமது பிறந்த தினத்தை கொண்டாடமுடியாத நிலைமைக்கு அமைச்சர் லலித் என்ன பதில் சொல்வார்?

போரைத் தடுத்து நிறுத்துவதாலேயே மக்களுக்குப் பாதுகாப்பளிக்கலாமென்பதை இன்று அனுபவரீதியாக உணர்ந்திருக்கும் பாதுகாப்புஅமைச்சருக்கு கடந்த வருடத்தில் இந்த ஞானம் உதயமாகி இருந்தால் இன்றைக்கு இந்த நாடு எப்படியிருக்குமென்பது தெரியாததல்ல.

பயமறியாத இளங்கன்றுகளுக்கு இன்று சாதனையால் புத்தி புகட்டவல்லவர் நாட்டின் பிரதமரே ஐ.தே.கட்சி ஆட்சி வடக்கை சந்தேகக் கண்ணுடன் நோக்கியதால் பிரதமரின் ஆக்க வேலைகள் தமிழ் பகுதிகளில் தலையெடுக்கவில்லை.

இருப்பினும் பத்துலட்சம் வீட்டுத்திட்டம் தொடர வேண்டிய காலத்தில் பலாயிரக் கணக்கில் வீடுகள் எரிக்கப்படுவதை பாதுகாப்பு அமைச்சரின் சாதனை என்று யாரும்சொல்லார். போருக்கு இரு பகுதிஉடன்படிக்கையைக் குழப்ப நினைக்கும்...

டன்பதை நாம் என்றும் மறந்ததில்லை: நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்புடைய அமைச்சர் அதற்குத் திரட்டிய படை எத்தகையது? உயர்கல்வி பயிலும் மாணவர்களும், பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களும் எவ்வித தளப்பமுமின்றி தங்கள் கல்வியில் முன்னேற, 'சோற்றுக்குக் கூறைக்கும்' தங்கள் வருமானத்தை அடகுவைத்து உயிரைப் பணயம் வைத்தவரே ராணுவசேவையின் பெரும்பான்மையர்.

தமிழ்ப் போராளிகள் யார் என்பதைப் பாதுகாப்பு அமைச்சர் மட்டுமல்ல; மகாவலி அமைச்சர் காமினி திசநாயக்காவும் நன்றாக இனம் காணவேண்டும்.

இலங்கையின் கிரிக்கட் சாதனை, அமைச்சர் காமினியைப் பரவசப்படுத்தியது போல, வேறெவரையும் அவ்வாறு பாதித்திருக்காது. பொறுமையை ஒரு தமிழ் அமைச்சர் கையில் அகப்படாது மீட்டிருக்கும் வெற்றிக்கு இன்றைய அரசமைப்பே பொறுப்பென்று கூறியிருக்கிறார்; டெஸ்ட் வெற்றியால் ஏற்பட்ட மயக்கம் என்றபோதும் அரசியல் ஞானத்தில் இக்கூற்று எந்த அத்தியாயம்.

ஒற்றையாட்சியென்பதும், இன மத மொழி பேதம் எதுவும் இல்லாத ஆட்சி என்பதுமே பேச்சு. உயர் கல்வி, வேலைபோன்ற பல துறைகளில் பயியுற்ற தமிழ் இளைஞர் தங்கள் சமூகத்தின் மீட்சிக்குப் 'போரை' விட வழி எதுவுமில்லை என்ற முடிவுக்கு பொறுப்புள்ள ஒரு அமைச்சரின் இக்கூற்று அங்கீகாரம் வழங்கவில்லையா?

இந்த அநியாயப் போர் ஒழியவேண்டும்; நியாயம் பிறக்க தமிழ்ச் சமூகம் இதுகாறும் அனுபவித்துவந்த துன்பங்கள் ஒழிய 'போர்' உதவாது. உலகிலுள்ள நவீன ஆயுதங்கள் இங்கு வந்து குவிந்தாலும், தமிழர் சிந்திய இரத்தம் துரிதப் படுத்தப்பட்ட மகாவலியைத் தாண்டிப் பாயும்.

எனவே 'போரை' நிறுத்துங்கள். அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்த இளைஞர், தவறுதான் செய்தாலும் அவர்களின் பகைமை உணர்வை அகற்ற அரசாங்கம் முன்வரவேண்டும். அரசும் மக்களும் தப்பும் வழியும் அதுவே.

தோல்வியின் அடிப்படையில் பேரம் பேசப்படுவது மனித இயற்கை; அதனை மாற்றி இன்றைய இளைஞர் உலகத்தைக் கசக்கிப் பிழியாமல் முன்னேறும் வழி தேடவேண்டும்.

நாத்திகன் ஒருவன் இருள் நிறைந்த இரவில் தனி வழி போனபோது மின்னலும், இடியும் மாறி மாறித்தாக்கிய வேளையில் "ஆண்டவனே நின்னை நான் முன் எப்போதும் உதவி தேடி வரவில்லை. எனவே இன்று நீர் எனக்கு ஒலியை நீக்கி ஒளியைத் தாரும்" என்று பிரார்த்தித்தான்.

இன்று இத்தநாட்டு மக்கள் அனைவரின் பிரார்த்தனையும் அதுவேயாகும்.

---

உங்கள் குழந்தை உங்கள் கையில்

# நோய் வராது தடுங்கள்!

**மூ. பஞ்சலிங்கம்**
(யாழ். அரசாங்க அதிபர்)

தீய சக்திகளின் மூலம் தங்கள் குழந்தைகளுக்குப்பாதிப்பு ஏற்படாமல் இருக்கத் தாய்மார்கள் தங்கத்தினால் பஞ்சாயுதம் செய்து தமது குழந்தைகளுக்கு அளிப்பது வழக்கம். இந்தப் பஞ்சாயுதத்தில் திரிசூலம், சங்கு, சக்கரம், அம்பு வில், வாள் ஆகியவை அமைந்திருக்கின்றன. இது சிறு குழந்தைகளுக்குப்பாதுகாப்பு அளிக்கிறது.

குழந்தைகளைத்தாக்கும் ஆறு கொடிய நோய்களான ஈரப்பு வலி, தொண்டைக்கரப்பன், கக்குவான், இருமல், இளம் பிள்ளைவாதம், க்ஷயநோய், சின்னமுத்து முதலியன அவர்களின் உயிருக்கு ஆபத்துவிளைவிக்கக்கூடியன. தெய்வீக சக்தியின் மூலம் இந்நோய்களைத் தடுக்க தாய்மார்கள் முன்வர வேண்டும்.

இலங்கைச் சிறுவர் பணியகம் ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர்நிதி(யூனிசெவ்)யத்துடனும் உலக சுகாதார நிறுவனத்துடனும், உலக சுகாதார நிறுவனத்துடனும் இணைந்து குழந்தைகளுக்கெனத் துரிதநோய்த் தடுப்புத் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது. ஒவ்வொரு குழந்தையும் மேற்குறிப்பிட்ட ஆறு நோய்களாலும் பாதிக்கப் படாதவாறு எதிர்காலத்தில் உடல்நலமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கையை வாழ வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இன்றைய தினத்திலிருந்து இனிமேல் பிறக்கப்போகும் எல்லாக் குழந்தைகளையும் இத்தப்பயங்கரமான நோய்களிலிருந்து முற்றாகப் பாதுகாப்பதையே இத்திட்டம் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

1978ஆம் ஆண்டின் பரந்த நோய்த்தடுப்புத் திட்டம் எனப்படும் விரிவான திட்டம் ஒன்று சுகாதார அமைச்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போதும், இப்பொழுது ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி தாய்மார்களுக்கு இவற்றைத் தெரியவைக்கும் நோக்குடன் நாடு முழுவதிலும் இம்முயற்சி இம்மாதம் தொடக்கம் மேற்கொள்ளப்படுகிறது. "தேசம் முழுவதும் நோய்த் தடுப்பு" (Going National with Immunization) என அழைக்கப்படும், இத்திவிரமான முயற்சியின் நோக்கங்களுள் ஒன்று, இப்பணியில் ஈடுபடும் அரசாங்க, அரசாங்க சார்பற்ற நிறுவனங்களையும் சேர்த்து, புதிய தலைமைத்துவத்தினை உருவாக்குவதற்குத் தூண்டுவதாகும். இத் திட்டத்தின் முழுமையான நோக்கம் குழந்தைகளையும் தாய்மாரையும் நோய்த்தடுப்பு முறைகளை முற்றாக அனுசரிக்கச் செய்து அவர்களை உயிர் வாழ வைப்பதும், பராமரிப்பதுமாகும்.

நோய்த் தடுப்பின் முக்கியத்துவத்தை அறியாமையாலும் நன்கு தெரிந்து கொள்ளாமையாலும், தமது பிள்ளைகளுக்கு நோய்த்தடுப்பு மேற்கொள்ளாதிருக்கும் வாய்ப்பற்ற குடும்பங்கள் ஆங்காங்கே வாழ்ந்து வருகின்றன. சில தாய்மார்கள் ஊக்குவிப்பு இன்மையாலும், வசதி குன்றிய பகுதிகளில் வாழ்பவர்கள் போக்குவரத்து வசதியின்மையாலும், இன்னும் மற்றையோர் தமவி பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வதற்கு வேறெவருமில்லாத நிலையிலும் சிகிச்சை நிலையங்களுக்குச் செல்லாதொழிகின்றனர். சுகாதார வசதிகள் குறைந்த பகுதிகளை அறிந்து அங்கு புதிய நிலையங்கள் அமைக்கப்படும்.

இத்திட்டம் வெற்றியளிப்பதற்குத் தடுப்பு மருந்துகள் அவற்றின் வலுவை இழக்காதிருக்கும் வகையில்தொடர்ச்சியான குளிரூட்டல் வசதியிருத்தல் வேண்டும். பரந்த நோய்த்தடுப்புத் திட்டம் இவையெல்லாவற்றையும் கருத்திற் கொண்டுள்ளது. இம் மருந்துகள் உற்பத்தி செய்யப்படும் தருணத்திலிருந்து குழந்தைகளுக்கும் தாய்மாருக்கும் அளிக்கப்படும் வரை அவற்றின் வலுக் குறையாதிருக்க தொடர்ச்சியான குளிர்சாதன முறையில் பாதுகாக்கப்படுகின்றன. இப்படிச் செய்வதன்மூலம் ஒரு பிள்ளைக்கு வலுவுள்ள மருந்து அளிக்கப்படுவது உறுதிப்படுத்தப்படுகிறது நோய்த் தடுப்பு மருந்துகள் எல்லாச் சுகாதார நிலையங்களிலும், அநேக வைத்திய சாலைகளிலும், சிகிச்சை நிலையங்களிலும் உள்ளன. குடும்பநல சேவையாளர்களுக்கும் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுக்கும், பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் நோய்த்தடுப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

"தேசம் முழுவதும் நோய்த் தடுப்பு" என்னும் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதைக் குறிக்குமுகமாக 35 சதம், 60 சதம், 6 ரூபா, 9 ரூபா ஆகிய பெறுமதிகளைக் கொண்ட நான்கு அழகான முத்திரைகள் வெளியிடப்பட்டுள்ளன. சிறுவர்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தவே இம் முத்திரைகள் வெளியிடப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் இத்தடுப்பு மருந்துகள் அளிக்கப்படும் சுகாதார நிலையங்களும் நாட்களும் நேரங்களும் விரைவில் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

(6-ம் பக்கம் பார்க்க)

---

# மக்கள் கருத்து

## பூநகரி பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்

பூநகரி வாழ்ஏழை விவசாயிகள் தொழிலாளர்களான அங்கத்தவர்கள் சொத்தாகிய மினி பஸ் இல29 ஸ்ரீ 7780; 21/08/85 பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் வைத்து இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் கடத்தப்பட்டது. இதுசம்பந்தமாக யாம் திருப்பி ஒப்படைக்குமாறு பத்திரிகை மூலமாக அறிவித்திருந்தும் மக்கள் நலன் விரும்பிகளை உதவுமாறு கேட்டிருந்தும் எமக்குஎதுவித பலனும்கிடைக்கவில்லை.

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மினிபஸ் சேவைமூலம்எமது பகுதிஏழை விவசாயிகள் தொழிலாளர்கள் கிளிநொச்சிக்கு தங்கள் விளைபொருட்களை சந்தைப்படுத்தவும் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்த நிலையில்பொது மக்களின் போக்குவரத்துக்கும் பெரும் உதவியாக இருந்து வந்தது. எமது மினி

(5-ம் பக்கம் பார்க்க)

---

★ இன்று ஆவணி விநாயகர் சதுர்த்தி விரதம்

## சஞ்சலம் களைந்தெனை அஞ்சலென் றருள்வாய்?

ராகம்: ரஞ்சனி    தாளம்: ஆதி

பல்லவி

தஞ்சமென் றடைந்தேன் குஞ்சித பாதனே!
சஞ்சலம் களைந்தெனை அஞ்சலென் றருள்வாய்!!
(தஞ்ச...)

அனுபல்லவி

பஞ்சின்மெல் லடியாள் வல்லபை துணைவா!
குஞ்சரி குலவிடும் குமரனின் முன்னவா!!
(தஞ்ச...)

சரணம்

காசையும் பேரையும் மதித்திட முனைந்தேன்!
ஆசையும் பாசமும் அலைத்திட அலைந்தேன்!!
யாவையும் தூசென உணர்ந்திட உணர்ந்தேன்!
யாவிலும் உன்னையே உணர்ந்திடத் தெளிந்தேன்!!
(தஞ்ச...)

—"முருகு"

# ★ திருமலையிலிருந்து தமிழகத்துக்கு தப்பிச்சென்றவர் 'இந்து' வுக்கு தெரிவித்த திடுக்கிடும் தகவல்!

(சென்னை)

"திருகோணமலை நகரிலிருந்து தமிழர்கள் வெளியே வர முடியாமலும் வெளியே உள்ளவர்கள் நகருக்குள் செல்லமுடியாமலும் உள்ளனர்" என்று திருகோணமலையிலிருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ள ஒருவர் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் கூறியுள்ளதாவது:-

"அவைபு", சிறிமாபுர, மகிந்தபுர ஆகிய சிங்களக் குடியேற்றத் திட்டங்களிலுள்ள சிங்களக் குண்டர்களினால் தமிழர்கள் இவ்வாறு வெளியே செல்லமுடியாமலும் உள்ளே வரமுடியாமலும் தவிக்கின்றார்கள். அவ்வாறு திருமலையிலிருந்து யாரும் வெளியே வர முற்பட்டால் அவர்கள் சிங்களக் குண்டர்களினால் கொலை செய்யப்படுகிறார்கள்.

"சிங்கள ஊர்க்காவல் படையினர் முதலில் லொறிகளில் வந்து தமிழர் வீடுகளைக் கொள்ளையடித்த பின்னர் வீடுகளைக் குண்டுவைத்துத் தகர்த்தனர்.

"திருகோணமலை ரயில் நிலையப் பாதையில் சிங்களக் குண்டர்கள் தமிழர்களைத் துரத்தித் துரத்தி வாள், கத்திகளால் வெட்டிக் கொலை செய்துகொண்டிருந்தனர். கொலைசெய்யப்பட்ட தமிழர்களின் சடலங்களை ரயில் நிலையத்திற்கு அண்மையிலுள்ள இந்து மயானத்தில் புதைத்துள்ளனர். வேறு சில தமிழர்களின் சடலங்களை வாகனங்களின் பின்புறத்தில் கட்டி இழுத்துச் சென்றனர்.

"முன்னாள் எம். பி இரா. சம்பந்தனின் வீட்டுக்கு சிவப்பு நிறக் கார் ஒன்றில் வந்தவர்கள் வீட்டின் பிரதான கதவைத் திறந்து முன் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளை முற்றாக அழித்துவிட்டனர். இக்கார் சிங்கள முதலாளி ஒருவருக்குச் சொந்தமானதாகும்.

"இங்குள்ள ஒவ்வொரு சிங்களவரின் வீடுகளுக்கும் வீட்டுக்கு ஒருவருக்கு என்ற வீதத்தில் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிப் பௌத்த மதக் குருமாருக்கும் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கிளிவெட்டி, சம்பூர், இருல்குழி, உப்புவெளி, தவரங்காடு, கிண்ணியா, பன்குளம், பன்மதவாச்சி, குச்சவெளி, கும்புறுபிட்டி, சேனையூர் உட்பட 50 கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியிலிருந்து தப்பிய தமிழர்கள் பலர் வழி தவறியுள்ளனர்.

"இவ்வாறு தப்பிச்சென்ற ஒருவர் தாம் காட்டில் சென்றபோது கண்ட கோரக் காட்சியைத் தன்னிடம் விபரித்துள்ளதாகத் தெரிவித்தார். அழிக்கப்பட்ட கிராமங்களிலிருந்து தப்பி வழிதவறியவர்களில் 9 பேர் காட்டில் இறந்து கிடந்ததாகவும், இவர்களின் சடலங்களில் எவ்வித காயங்களும் காணப்படவில்லையென்றும். இவர்கள் உணவின்றி இறந்திருக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் 60 ஆயிரம் தமிழர் அகதிகளாகியுள்ளார். இவர்களில் பலர் காடுகளிலும் தெரிந்தவர்களின் வீடுகளிலும் தங்கியிருக்கின்றார்கள். செப்டம்பர் 4 ஆம் திகதியில் 60 கடைகள், 250 வீடுகள் 12 இந்துக்கோவில்கள், ஒருபள்ளிவாசல் ஆகியன அழிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள சிங்கள அரசியல்வாதிகள் சிங்களவர்களை அகதி முகாம்களுக்குப் போய் இருக்குமாறு பணித்துள்ளனர் இதன் மூலம் இலங்கை அரசுக்குச் சாதகமான ஆதரவை வெளிநாடுகளில் பெறுவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

மரணமான தமிழரின் சடலங்களை அடையாளம் காண்பித்த உறவினர்கள் சடலங்களை அடக்கம் செய்வதற்கு ஆஸ்பத்திரியில் கேட்டபோது அவ்வாறு சடலங்களைக் கொடுக்க முடியாது என்று கூறிய பொலிஸார், இச்சடலங்களை கொடுக்க வேண்டாமென அரசாங்கம் உத்தரவிட்டதாகக் தெரிவித்தனர். தமிழரின் சடலங்களைப்படம் எடுத்து வெளிநாடுகளில் தமிழர்களுக்கு ஆதரவு பெருகும் முயற்சியை அரசும் பாதுகாப்பு படைகளும் தடுக்கவே சடலங்களை ஒப்படைக்காது இருந்து வருகின்றன. (ரா)

## பூநகரி..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்ஸை கடத்தியதன் மூலம் ஏழை விவசாயிகளும் தொழிலாளிகளும் தங்கள் விளைபொருட்களை சந்தைப்படுத்த முடியாத துன்பமடையும் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதுடன் இவர்கள் சொல்லொணாத் துன்பத்திற்கும் அவதிக்கும் ஆளாக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று கூட்டுறவுத்துறை ஒன்றே மக்களுக்கு பாரிய கஸ்டத்தின் மத்தியிலும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சேவைகளை கூட நடத்தி வருகின்றது. தாங்க முடியாத நிதிக்கஷ்டத்திலும் மற்றும் உணவுப் பொருட்கள் எடுத்துவரும் போது இடம் பெறும் கெடுபிடிகளாலும் எமது சங்க ஊழியர்கள் தமது உயிரை பணயம் வைத்து வேலை செய்துவருகின்ற காலமிது. இந்த நிலையில் மினி பஸ்ஸைப்பறித்தன் மூலம் எமது ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் வருவாய் தரும் துறை மூடப்பட்டுள்ளது. இதனால் பல ஊழியர்கள் வேலை இழக்கும் நிலை உருவாகியுள்ளதை பொது மக்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

இதுசம்பந்தமாக உடனடியாக பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதுடன் பொதுமக்களுடன் ஊர்வலம் செய்து பொதுக்கூட்டம் நடாத்தவும் தீர்மானித்து எமக்கு அறிவித்துள்ளனர் இதனால் 16 09-85ல் இருந்து எமது சங்கத்தின் சகல கிளைகளும் ஆப வள்ளச் சேவை அரிசி ஆலை அனைத்தும் மூடப்படவேண்டியநிலை ஏற்பட்டது எமக்கு கவலையளிக்கிறது இதன்மூலம் மேலும் பொதுமக்களே கஷ்டப்பட வழிவகுக்க து எமது சங்கத்தின் மினி பஸ்ஸை உடனடியாக திருப்பி ஒப்படைக்குமாறு கடத்தியவர்களை நெறியாளர்கள், பணியாளர்கள் சார்பாக மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் கூட்டுறவுத் துறைக்கு இழப்புகள் ஏற்படாதவாறு பாதுகாக்க திடசங்கற்பம் பூண்டுள்ள பெரிய இயக்கங்கள் இதனை திருப்பி ஒப்படைக்க உரியநடவடிக்கை எடுத்து எமது சங்கத்தினைக் காப்பாற்ற வேண்டும் என மிகவும் பணிவன்புடனும், தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்
திரு. தி. இராசநாயகம்,
நெறியாளர் குழு உறுப்பினர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

# கோண்டாவில் இணுவில் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க தொழிலாளரின் இரு கோரிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

சில கோரிக்கைகளை முன்வைத்து கோண்டாவில், இணுவில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் சீவல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் (தவறணைக்கு கள்ளுக் கொடாமையில்) இறங்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

எழுபது சீவல் தொழிலாளர்கள் கையொப்பமிட்டு கோண்டாவில் இணுவில் தெ. ப. பொ. உ வி கூ. சங்க முகாமையாளருக்குக் கையளித்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

இதுவரை காலமும் ஒய்வு பெற்றுவந்த சீவல் தொழிலாளருக்கு 5000 ரூபா கொடுக்கப்பட்டு வந்தது ஆனால் இத்தொகை தற்சமயம் 1500 ரூபாவாககுறைத்துள்ளமையை ஆட்சேபிக்கிறோம். ஒரு தொழிலாளிக்கு ஒரு விதமும், இன்னொரு தொழிலாளிக்கு வேறு ஒரு விதமாகவும் சங்கம் நடப்பது துரோகச் செயலாகும் சங்கத்தின் நிதி நிலைமை சீராகும் வரை வேண்டுமானால் ஒய்வுப் பணம் 5000 யும் பகுதி பகுதியாகக் கொடுக்கலாம் எனவே இப்படியான தீர்மானத்தைச் சங்கம் எடுக்க வேண்டும்.

மேற்சொன்ன இருகோரிக்கைகளையும் முன்வைத்து இக் கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில் மேற்படி சங்க சீவல் தொழிலாளர் கள்ளுக் கொடாத இயக்கத்தை அக்டோபர் 7-ம் திகதி முதல் நடாத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளனர். (ஐ)


## சஞ்சிகை வியாபாரிகளுக்கு

குமுதம், ஆனந்தவிடகன், இதயம், கல்கி, பொம்மை, மங்கை, அம்புலிமாமா, இரத்தின பாலா, ஜெமினி சினிமா, SPORT STAR மற்றும் இதர சஞ்சிகைகள் தேவைப்படும் வியாபாரிகள் எம்மிடம் தொடர்புகொள்ளுங்கள்.
[தற்பொழுது எம்மிடம் சொற்ப பிரதிகள் மட்டும் கைவசம் உள்ளன.]

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம். (782)


# 'பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாறுகின்றன'

## மகாசிவம் பேச்சு

(யாழ்ப்பாணம்)

சிங்கள ஆசிரியர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயலுருப் பெறுகிறது. புதிதாக ஆசிரியர்சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுகிற சிங்கள ஆசிரியர்கள் கட்டாய இராணுவ சேவையை 7 வருடங்களுக்குச் செய்ய வேண்டும் என கேட்கப்படவுள்ளனர். பாடசாலை மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாறிவருகின்றன. தமிழ் ஆசிரியர், மாணவர்கும் இராணுவப் பயிற்சி அளித்தாலென்ன? எமதுபாதுகாப்புக்கு நாம் என்ன செய்வது? நாம் தான் எம்மைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் ஊர்வலமாக வந்து யாழ். கல்வித் திணைக்களத்தில் ஊர்வலத்தை முடித்துக் கொண்ட ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. தா. மகாசிவம் கூறினார்.

இருபாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆசிரியர்களின் ஊர்வலம் யாழ். கல்வித்திணைக்களத்தில் வந்து முடிவுற்றதும் பொதுக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. இக் கூட்டத்துக்கு தமிழர் ஆசிரியர் சங்கச் யாழ் மாவட்டச்செயலாளர் சிவபாலசிங்கம் தலைமை வகித்தார்.

மகாசிவம் மேலும் கூறிய கூறியதாவது: திருகோணமலை பகுதிகளில் தமிழ்மாணவர் அகதிமுகாம்களில் இருக்கிறார்கள் கானகத்தில் வாசம் செய்கிறார்கள் இதேபோன்று வவுனியா முதல் செட்டிகுளம் வரையிலான தமிழ்ப்பகுதி மாணவர்களும் கல்வி இழந்துள்ளனர் இன்றுமட்டக்களப்பு பிரதேசமும் இந்நிலைக்கு வந்துள்ளது சிலசமயம் நமது குடா நாடும் இன்றோ நாளையோ அந்த நிலைக்குவரக்கூடும் தமிழ் நாட்டில் ஈழத்தமிழர் இளைஞர்களுக்காகப் போராட்டங்களை நடாத்துகிறார்கள். நமது மண்ணில் அங்கிருக்கும் உணர்ச்சியைக் காண முடியவில்லை. எமது இனப்பிரச்னை தீர்ந்தால்தான் தமிழ் ஆசிரியர்களது பிரச்னைகளும் தீரும் என்றார்

இச்சங்கத்தின் சிரேஷ்ட பொதுச்செயலாளர் திரு. எஸ் பஞ்சலிங்கம் நிதிச் செயலாளர் திரு. என். சோதிநாதன் ஆகியோரும் பேசினர்.

## பெற்றோர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலை 9மணிக்கு அவரது அலுவலகத்தில் சந்தித்து வெலிக்கடைச் சிறைச்சாலை அத்தியட்சகருக்குரிய பணிப்பை பெற்றுக்கொள்வதற்கும் தங்கள் கருத்துக்களை நேரடியாக தெரியப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுளது.

இது விஷயமாக கொழும்பிற்கு செல்லவிருக்கும் பெற்றோர் அல்லது உறவினர்கள் உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களின் பெயரையும், தமது பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் முதலிய விபரங்களையும் உடனடியாக யாழ் பல்கலைக்கழக மாணவர் குழுவுடன்தொடர்பு கொண்டு அவர்களிடம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். அத்துடன் இவர்கள் 23-ம் திகதி கொழும்பில் நிற்கவேண்டியிருப்பதால் 22-ம்திகதிகாலை கொழும்பிற்கு புறப்படவேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளனர். (ச)

## மானிப்பாய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணைக்கு இருவர்செல்ல அவர்களின் பின்னே "தலைநகர் மக்களுக்கு பிறந்தநாள் கொண்டாட்டம் தமிழ் ஈழமக்களுக்கு திண்டாட்டம்" என்ற சுலோகத்தை தாங்கிய வண்ணம் பலர் சென்றுகொண்டிருந்தனர்.

கொடும்பாவிக்கு முன்பாக ஒருவர் தலையில் கொள்ளிக்குடம் கொண்டுசெல்ல, இன்னொருவர் வழியெங்கும் நெற்பொரி தூவியவண்ணம்சென்று கொண்டிருந்த இந்தஊர்வலத்தில் முகத்தை கறுப்புத்துணியால் மூடிய ஒரு குழுவினர் ஒப்பாரி வைத்தவண்ணம் சென்றனர்.

ஊர்வலம் ஆனைக்கோட்டை, ஒட்டுமடம் வீதியாக யாழ். பஸ் நிலையத்தை அடைந்து அங்கு கொடும்பாவி சைக்கிளிலிருந்து இறக்கப்பட்டு ஊர்வலத்தில் வந்தோர் வாய்க்கரிசி போட கொள்ளிக்குடம் உடைக்கப்பட்டு தீ மூட்டப்பட்டது.

இச்சம்பவத்தை பெருந்திரளான மக்கள் குழுமி நின்று பார்த்துக் கொண்டிருந்தனர் போக்குவரத்துச் சேவைகளும் பதினைந்து நிமிடம்வரை தடைப்பட்டன.

கொடும்பாவி முற்றாக எரிந்ததும் ஊர்வலத்தில் வந்தோர் சாம்பலையும் அள்ளிக்கொண்டு அவ்விடத்தைவிட்டுச் சென்றனர். (ச)

## 9 லொறிகளு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

'மட்டக்களப்பில் இராணுவத்தினரால் தமது வீடுவாசல்களை இழந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தேன். இராணுவத்தினர் என்னைப் பிடித்து தமிழ்ப்போராளிகள் பற்றிய விபரங்களைக் கொடுக்குமாறு கேட்டனர் இதன்பின்னர் அவர்கள் எனது காதுகளை கிழித்துவிட்டனர்" என்று கூறி அந்த தழும்புகளை செய்தியாளர்களிடம் அந்த இளைஞர் காட்டினார்.

"தமது நண்பரான யேசுதாஸ் என்பவர் மட்டக்களப்பில் இராணுவத்தினரால் கட்டுக்கொலைசெய்யப்பட்டு பெற்றோல்ஊற்றி கொளுத்தப்பட்டதை தான் கண்ணாலேயே கண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

## அந்த இரு..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தெரிவிக்கப்பட்டது.

பெற்றோர் பொறுப்பேற்றாலும் சடலங்களை வீட்டுக்குக் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அறியப்படுகிறது.

## டிக்ஸிற்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மட்டக்களப்பு பஸ்நிலையத்தில் நின்ற பொதுமக்களைப் பலமாகத் தாக்கியதாகவும் திரு. சம்பந்த மூர்த்தி தெரிவித்துள்ளார்

யுத்த நிறுத்தம் மீறப்படுகிறதென்பதற்கு மேற்குறிப்பிட்ட இரு விஷயங்களும் எடுத்துக் காட்டாக இருப்பதாகவும் திரு. டிக்ஸிற்றிடம் அவர் வலியுறுத்திச் சொன்னார்.

குறிப்பிட்ட இவ் விஷயங்கள் பற்றி பாதுகாப்பு அமைச்சருடனும் இந்தியாவுடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக திரு. டிக்ஸிற். திரு சம்பந்தமூர்த்திக்கு உறுதியளித்துள்ளார் (ரா-மா)

# யாழ். வந்த மினி பஸ்ஸை ஊர்காவல்படையினர் தாக்கினர்

## ஆஸ்பத்திரியில் சாரதி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவல் படையினரால் தாக்கப்பட்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காலில் 3 துப்பாக்கிக் குண்டுகளுடன் மினிபஸ் சாரதியொருவர் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த மினிபஸ் ஒன்றின் சாரதிக்கே இக்கதி நேர்ந்துள்ளது. மினிபஸ் பலத்த சேதத்துக்குள்ளானபோதும் பிரயாணிகள் எவ்வித உயிராபத்துமின்றி தப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

மதவாச்சியில் தவசிமலை என்ற இடத்தில் நண்பகல் ஒரு மணியளவில் 40 க்கும் மேற்பட்ட ஊர்காவல்படையினர் துப்பாக்கிகள், கத்தி பொல்லுகள் சகிதம் பிரயாணிகளுடன் மேற்படி பஸ்ஸை வழிமறித்ததாகவும் சாரதியின் சாதுரியத்தினால் பஸ் நிறுத்தப்படாது வேகமாக ஓட்டிச் செல்லப்பட்டதாகவும். அச்சமயம் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சாரதியின் காலில் 3 குண்டுகள் பாய்ந்ததாகவும் கூறப்படுகிறது ஒரு சமயம் சாரதி தனது ஆசனத்தில் படுத்தவண்ணம் பஸ்ஸை செலுத்தியதாகவும் கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுடன் சாரதி பஸ்ஸை வவனியா ஆஸ்பத்திரி நோக்கிச் சென்றதாகவும் அங்கு உடன் சிகிச்சையளிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் கடந்த 4ம் திகதி தவசிமலையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை பாலச்சந்திரன் என்பவராவார். (ச)

## தெல்லிப்பழை மேற்கு சுகாதார நிலையத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மேற்கு கிராமோதய ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தின் திறப்புவிழா தலைவர் திரு. என். கனகசேகரம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிலையம் கொல்லங்கலட்டி, பன்னாலை, வீழிசிட்டி, தையிட்டிபுலம் கருகம்பானை, மயிலங்கூடல் கிராமங்களில் உள்ளோருக்கு சிறந்த சேவையாற்றும் நோக்கோடு அமைக்கப்பட்டுள்ளது. வைத்திய நிபுணர்களின் ஆலோசனை மற்றும் வசதியற்றோருக்கு வைத்திய உதவிகள் செய்து கொடுப்பதே இந்நிலையத்தின் குறிக்கோளாகும் எனக் கூறப்படுகிறது'

இவ்விழாவில் சுகாதார இலாகா வைத்தியர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். (ச)

# 'அந்தத்' தமிழகம் நோக்கி .....

— தி. பொன்னம்பலவாணர்

[8]

சுமார் 300 வருட வரலாற்றினை உடைய வட பழனி ஆலயமாகும். சென்னைக்குச் சமீபமாக சென்னையிலே வாழ்ந்த அன்பர் ஒருவர் பழனி முருகனைத் தரிசிக்கச் சென்றார். தனது ஊர் திரும்பிய பின்னரும் பழனி முருகனைத் தரிசிக்க விரும்பினார். அந்த அன்பரின் ஆசையை நிறைவேற்ற முருகன் எழுந்தருளிய ஆலயமே வடபழனி ஆலயமாகும்

கயிலைமலையில் மாம்பழம் கிடைக்கவில்லை என்பதற்காக கோவணாண்டியாகப் பழனி மலையில் வந்து தங்கிய முருகன் பக்தர் ஒருவருக்காக மலையல்லாத இடத்தில் உவந்து உறைகின்றார்.

சென்னைபட்டனத்தின் இடநெருக்கடியை ஆலயத்துள் காண முடியாவிட்டாலும், ஆலய வீதிகளில் காணக்கூடியதாக இருக்கிறது. எதுவித முன்னேற்பாடுமின்றி வடபழனி ஆலயத்துக்கு நான் சென்றபோது அன்று தேர்த் திருவிழாவாக விருந்தது.

கோபுர வாயிலுக்கு முன்பாக 25 அடி உயரம் மதிக்கத்தக்க சிறிய தேர் ஒன்று நின்றது. சிறிய அளவிலான தேராக இருக்கிறதோ? ஏன் நிற்கிறது? என்று சிந்தித்தவாறு ஆலயத்துள் சென்றேன். விநாயகர் சொக்கநாதர் மீனாட்சி அம்பாள் தரிசனங்களை நிறைவு செய்து கொண்டு சென்றபோது தான் முருகப் பெருமான் தேரில் புறப்படுவதற்கு உரிய முறையில் அலங்காரங்களுடன் இருப்பதைக் கண்டேன். அலங்கார முருகனைத் தரிசனம் பண்ணிக் கொண்டு மூலஸ்தானத்தில் முருகனைத் தரிசிக்கச் சென்றேன்.

வடபழனி முருகப்பெரு

## வடபழனி முருகன் சந்நிதியில் இலவச வைத்திய சேவை!

மான் சந்நிதியை அடைந்த போது-திருமுருகப்பெருமானின் அருளமை நிறைந்த திருமுகத்தைத் தரிசித்த போது முருகனின் தரிசன இன்பம், தெய்வீக ஈடுபாடற்ற சாதாரண ஒருவனையும் வசீகரிப்பதாக இருந்தது

என்ன காரணமோ தெரியவில்லை தேர்திருவிழாவுக்கான சந்தடி இல்லாது அனைகலப்பாக ஆலயம் விளங்கியது ஆறுதலாக வழிபட்டு நானும் வெளியேவர முருகனும் தேரேறி உலாவர வெளியே புறப்பட்டார்.

எந்தவிதமான கெடுபிடியும் இன்றி தேரில் முருகன் எழுந்தருள்வதற்குமுன் சில கிரிகைகள் அமைதியாக - முறைபாக நடைபெற்றன. முருகன் தேரில் ஏறியபின் தேரும் வீதியும் முருகனும் அற்புத சூழல் மயமானதை உணரக்கூடியதாக இருந்தது. தேரோடும் வீதியில் தேர்வரும் போது தான் தேர் சிறியதாக இருப்பதன் காரணம் புரிந்தது. மிகவும் அகலம் குறைந்த வீதி வடபழனியில் தேரோடும் வீதி.

### இலவச வைத்திய சேவை

ஆலயத்திலிருந்து புறப்படும் போது அங்கிருந்த சித்த வைத்திசாலை ஒன்றுக்குச் சென்றேன், ஆலய நிர்வாகத்தில் இலவச வைத்தியசேவை செய்யும் நிலையம் அது. அங்கிருந்த வைத்தியர் இலவச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் அலட்சியத்தன்மையின்றி அன்புடன் கடமையாற்றுகின்றார்.

என்னுடைய கைநாடியைப் பரிசோதனை செய்து தேவையான புத்திமதிகளையும் மருந்தையும் தந்தார்.

நான் யாழ்ப்பாணத்தவன் என்றதும் என்னுடன் மிக அன்பாக அளவளாவிப் பேச்சுக் கொடுத்தார். மருந்து பெற்றுக் கொண்டு விடை பெறுவதற்கிடையில் தன் இயல்பிற்கு ஏற்ப நல்ல உபசாரங்கள் செய்தார்

கடைசியாக "இந்த வைத்திய நிலையத்தைப் பற்றியும் என்னைப் பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்" என என்னிடம் கேட்டார்

'திருமுருகன் ஆறுமுகங்களாலும் ஆறுவிதமாக அருளைச் செய்வதாகக் கூறுவர். வடபழனி முருகனின் ஒரு முகம் வைத்தியம் செய்து அடியார்களுக்கு நோய் தீர்க்கும் கருணையுடன் இருப்பதாகவே இவ்வைத்தியசாலையைப் பற்றி உணர்கிறேன்" என்று என் மனதில் பட்டதைக் கூறி வைத்தியரிடம் விடை பெற்றேன் என் கையில் விபூதி பிரசாதத்தோடு 'மகாஏலாதி' என்னும் மருந்து 'டப்பி'யும் வடபழனி முருகனின் அருட் பிரசாதமாக இருந்தது.

(தொடரும்)

# நோய் வராது தடுங்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள் பணியகத்தினால் தரப்பட்டுள்ள நோய்த்தடுப்பு அட்டவணை கீழே காணப்படுகிறது. இது இளந் தாய்மார்களுக்கு மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கும்.

## நோய்த்தடுப்பு அட்டவணை

தாய்மார்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய—இச்சேவை எல்லாக் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

| எப்பொழுது | எது | ஏன் |
|---|---|---|
| | குழந்தைகளுக்கு | |
| குழந்தை பிறந்தவுடன் | பி. சி. ஜி. தடுப்பு மருந்து | காச நோயிலிருந்து பாதுகாப்பளிக்க. |
| மூன்றுவது மாதத்தில் | முக்கூட்டுத்தடை மருந்து-1 (Triple Vaccine-1) | தொண்டைக்கரப்பான், கக்குவான் இருமல், ஈர்ப்பு வலி ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பளிக்க. |
| | இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து-1 (போலியோ) | இளம்பிள்ளைவாதத்திலிருந்து பாதுகாப்பளிக்க. |
| ஐந்தாவது மாதத்தில் | முக்கூட்டுத்தடை மருந்து-2 | ,, ,, |
| | இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து-2 | ,, ,, |
| ஏழாவது மாதத்தில் | முக்கூட்டுத்தடை மருந்து-3 | ,, ,, |
| | இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து-3 | ,, ,, |
| ஒன்பதாவது மாதத்தில் | சின்னமுத்துத் தடுப்பு மருந்து | சின்னமுத்து நோயிலிருந்து பாதுகாப்பளிக்க. |
| பதினெட்டாவது மாதத்தில் | முக்கூட்டுத்தடுப்பு மருந்து-4 | தொண்டைக்கரப்பான், கக்குவான் இருமல் ஈர்ப்புவலி, ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பளிக்க |
| | இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து-4 | இளம்பிள்ளை வாதத்திலிருந்து பாதுகாப்பளிக்க |
| | கர்ப்பவதிகளுக்கு | |
| கர்ப்பமுற்ற 12-வது வாரத்தின்பின் | ஈர்ப்புவலி நச்சுத் தன்மைத் தடுப்பு மருந்து-1 | பிறந்த குழந்தையையும் தாயையும் ஈர்புவலியிலிருந்து பாதுகாக்க. |
| 1-வது மருந்து கொடுக்கப்பட்ட 6-வது வாரத்தின்பின் | ஈர்ப்புவலி நச்சுத் தன்மை தடுப்பு மருந்து-2 | ,, ,, |

நோய்த்தடுப்பினை இன்றே மேற்கொள்ளுங்கள்! நாளை காலங்கடந்ததாகிவிடலாம்,

அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
யாழ்ப்பாணம்.

ஊறணி புனித அந்தோனியார்
கிராம அபிவிருத்திச் சங்கம்

முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தினூடாக காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலை 3ம் கட்டத்தில் வேலைசெய்த சகலரையும் அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு விடயமாக வரும் 21-09-85 சனிக்கிழமை என்னைச் சந்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்

தலைவர்,
ஊறணி புனித அந்தோனியார்
கிராம அபிவிருத்திச்சங்கம்

16-09-85 (759)

வெளிநாடு
பிரயாணம்

★ அமெரிக்கா ★ கனடா
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி

செல்லவிரும்பும் பிரயாணிகள் என்னுடன் நேரில் வந்து சந்திக்கவும்.

இன்று முதல் ஞாயிறு வரை (22-9-85)

வ. நல்லையா,
அலவத்தை - அளவெட்டி.

(774)

# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 2 (18-9-1985)
கிழமை: புதன்
திதி: சதுர்த்தி
நக்ஷத்திரம்: சுவாதி

மேடம்: பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் காமனின் கணை தாக்கும். காதலர் உலகில் கனிவான சம்பவங்களும் இடம் பெறும். தானதருமங்களும் மேலோங்கி நிற்கும்.

இடபம்: வைத்தியச் செலவுகளுக்கு இடமுண்டு. மாணவர்களாயின் சிந்தித்துச் செயலாற்றவும். கூட்டு வியாபாரத்திலும் மோசடிகள் இடம்பெறும்.

மிதுனம்: பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும். புதிய பாதை திறக்கும். ஸ்தலயாத்திரைக்கும் வழி பிறக்கும். இனிமையான தினம்.

கடகம்: தொழில் முன்னேற்றமுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் கிட்டும். எக்காரியத்திலும் தடைகள் நீங்கும். வாகன சுகமும் உண்டு.

சிம்மம்: வணிகர்களாயின் அதிக லாபம் கிட்டும். சிலருக்கு கடன் தொல்லையும் நிவர்த்தியாகலாம். பொருள் வரவு, உபசாரம் இவற்றுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

கன்னி: பணமுடக்கம் மனத்திடத்தைக் குலைக்கும். திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும். கடற்றொழிலாளர்கள் கவனம் செலுத்தவும். வீண்பிரச்னைகளும் ஏற்படலாம்.

துலாம்; பொருள் விரயத்திற்குமிடமுண்டு. கடமையில் எதிர்ப்புகள் தோன்றும். கொடுக்கல் வாங்கல் பிணக்குகளும் உருவாகலாம். முதலீட்டைத் தவிர்க்கவும்.

விருச்சிகம்: இல்லத்தில் இனிமை தவழும். எதிலும் சாதகமான சூழ்நிலை தென்படும். பெரியோர் ஆசியுடன் பொருள் சேரும்.

தனுசு: எண்ணிய காரியத்தில் எதிர்பாராத தடைகள் தோன்றும். வாக்குவலிமை குன்றும். உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும்.

மகரம்; உழைப்பினால் முன்னேற்ற முண்டு. வியாபாரத் துறையில் விருத்தியுண்டு. தாய் வழிப் பொருள் வரவிற்குமிடமுண்டு.

கும்பம்; குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை தென்படும். கால்நடை விருத்திக்குமிடமுண்டு. புதிய முதலீடுகளுக்கும் சிறப்பான தினம்.

மீனம்: கடமையில்ள திர்ப்புகள் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் பிணக்கும் உருவாகலாம். அவப்பெயரும் கிடைக்கலாம், பொறுமை நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்


**உஷா மினி**
10-30, 2-30, 4-45, 6-45
புதிய வெளியீடு
Chuck Norris......in
**Silent Rage**
Adults only)
தற்போது கொழும்பில் ஜனத்திரளாக காட்சியளிக்கும் திகில் சண்டைப்படம்.

**லிபேர்ட்டி மினி**
10-30, 2-30,
4-45, 7-00
**RED SUN**
சிறந்த சண்டைப்படம்

**சரவணபவன் மினி சினிமா**
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
John Saxon in
PRISONERS OF THE LOST UNIVERSE
(மறைந்த மண்டலத்தின் கைதிகள்)
(வயது வந்தோருக்கு மட்டும்)

**ஸ்ரான்லி மினி**
5 Ks° திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Sophia Laurance in
**Sun Flower**
(Love story)
இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது தனது காதலியைப் பிரிந்து போருக்குச் செல்லும் ஒரு வீரனின் காதல் காவியம்.

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30,
பாக்கியராஜ்- அம்பிகா நடித்த
**அந்த ஏழு நாட்கள்**

**ரீகோ சினிமா**
10-30, 2-30, 6-30
2-வது வாரமாக ஓடுகிறது!
சிவகுமார், இளசந்திரன், பூர்ணிமா ஜெயராம், இலக்ஷ்மிதா, ஜெய்சங்கர் நடித்த
ராஜு மகேந்திராவின்
**நீங்கள் கேட்டவை**
வண்ணக் கலர்


## ரயில் சேவை

(கொழும்பு)

மட்டக்களப்பிற்கும், மன்னாருக்கும் புகையிரத சேவைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு ரயில்வே அதிகாரிகள் முயற்சி எடுத்து வருவதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

ரயில் பாதைகளில் முக்கிய திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் திருகோணமலை ரயில்பாதை சில காலத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வருடாந்த பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இம்மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை காலை 9 30மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. ஏ கதிர்காமர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை பேராசிரியர் திரு கே. சிவத்தம்பி பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். பரிசில்களை திருமதி. சிவத்தம்பி வழங்குவார். (ச)

# இப்படியும் நடக்கிறது

கண்டி அஸ்கிரிய விளையாட்டரங்கில் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இலங்கை - இந்திய கிரிக்கெட் டெஸ்டில் நேற்று முன்தினம் இந்தியவீரர் ஸ்ரீ காந்த் (25 வயது) முப்பத்தெட்டு பந்து வீச்சில் நாற்பத்தேழு ஓட்டங்களை விளாசித்தள்ளி விட்டார்!

இதுபற்றிரூபவாகினியில் நேரடி சிங்கள வர்ணனையாளர் இப்படி வாய்விட்டுக் கூறினார்:

"குறுகிய நேரத்தில் இத்தனை ஓட்டங்களை தமது பக்கத்துக்கு குவித்த ஸ்ரீ காந்தின் அபார விளையாட்டைப் பார்த்த மக்கள் நீண்ட காலத்துக்கு ஸ்ரீ காந்த் விளையாட்டை மறக்கமாட்டார்கள்......"

ஸ்ரீகாந்த் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். கொழும்பில் கோட்டை விட்டதை சரிக்கட்டும் விதத்தில் கண்டியில் இவரது அபாரமான விளையாட்டு...... தமிழ் நாடே பெருமை பெற்றமாதிரித்தான்! குறிப்பாக தமிழக முதல்வர் எம் ஜி ஆர் பூரிப்படைந்திருப்பார்! காரணம்; எம் ஜி.ஆர் பிறந்ததே கண்டி மண்ணில்தானே!

— ஊடுருவி

## பத்திரிகையாளருக்கு துப்பாக்கிகள்!

(லண்டன்)

பிலிப்பைன்ஸ் நாட்டு அரசாங்கம், அந்நாட்டுப் பத்திரிகையாளர்கள் துப்பாக்கிகளை எப்போதும் வைத்திருக்க அனுமதிவழங்கியுள்ளது.

புதிய சட்டத்தின் மூலம் பத்திரிகையாளராக பதியப் பெற்றவர்கள் துப்பாக்கி வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகையாளர்கள் செய்திகள் சேகரிக்கும் போது ஏற்படும் ஆபத்துக்களை சமாளிக்கவே நடவடிக்கை என அந்நாட்டு அரசாங்க உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். (செ)

# 'தமிழர் படுகொலை முழு இந்தியாவுக்கே கவலை'

## கருணாநிதி கண்டனம்!

(சென்னை)

'இலங்கையில் பாதிக்கப்படும் தமிழர்களுக்காக நடாத்தப்படும். தேசிய அளவிலான கதவடைப்புதான் உண்மையானதேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கவழிவகுக்கும்' என்று திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு மு கருணாநிதி கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் இனப்படுகொலையைக் கண்டிக்கும் வகையில் இம்மாதம் 24ம் திகதி நடாத்த உத்தேசித்திருக்கும் மாநில அளவிலான கதவடைப்பை யிட்டு கருத்து தெரிவிக்கையிலேயே திரு மு. கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தேசியஅளவிலாக நடாத்தப்பட வேண்டுமென்று தமிழீழ ஆதரவாளர் அமைப்பு அ தி மு க கட்சியையும், இந்திரா காங்கிரஸ் கட்சியையும் கேட்டுக்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ ஆதரவாளர் இயக்கத்தின் கூட்டத்திற்குப் பின் திரு. கருணாநிதி பத்திரிகையாளருடன் பேசுகையில் "இலங்கைத்தமிழர்படுகொலை செய்யப்படுவது, தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி இந்திய மக்களுக்கே வருத்தத்தையும் கவலையையும் தருகின்றது. என்று தமிழீழ ஆதரவாளர் இயக்கம் உணர்ந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார். (பி)


## அதிர்ஷ்ட சீட்டுகள்

நல்லூர் பூங்காவன திருவிழாவின் (15-9 85) அன்று மாலை 7-00 மணியளவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டுகளின் விபரம்;

1-ம் பரிசு இல. 37
2-ம் பரிசு இல. 327
3-ம் பரிசு இல 529

பரிசு பொருட்களை திருநெல்வேலி பால் பண்ணைக்கு முன்னால் பெற்றுக்கொள்ளலாம்.

(780)


## பின்னுறுதிக் கட்டளை பற்றி அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா சிவலிங்கத்தின் மரணசாதனமற்ற சொத்துக்களின் தத்துவநிர்வாகப் பத்திர விண்ணப்ப விடயத்தில்.

மரணமெய்தியவர்.

1: புஸ்பகாந்தி சிவலிங்கம், 8ம் வட்டாரம், வேலணை மேற்கு.

மனுதாரர்

இல: தத்துவம்/103

இந்நீதிமன்றத்தில் மேற்குறித்த இலக்கங்கொண்ட மரணச்சொத்து நிர்வாகத்தத்துவ வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப்பத்திரம் பெற மேற்சொல்லப்பட்ட மனுதாரரால் தாக்கல்செய்யப்பட்டு அதற்கான பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக கட்டளையாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்.

1985ம் ஆண்டு ஆவணி மாதம் 28ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி,
பதில் பதிவாளர்,
க. பொன்னம்பலம்.

தயாரித்தவர்:
மனுதாரரின்
சட்டத்தரணி:
அ. மரியாம்பிள்ளை.

728


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின்
# (வெளிநிலை) விரிவுரைகள்

கல்வியாண்டு 1986/87

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பாடநெறிகளான

- கலைமாணி
- விஞ்ஞானமாணி
- சட்டமாணி
- வணிகமாணி

க. பொ. த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும்

ஆகஸ்ட் பரீட்சைக்கு தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்

விபரத்தினையும், விண்ணப்ப படிவத்தினையும் பெறவிரும்புவோர் ரூபா 5/- காசுக்கட்டளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்

**விண்ணப்ப முடிவு திகதி: 2-10-1985**

குறிப்பு:-
தபால் மூலம் விண்ணப்பிக்கும் மாணவர்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாங்கள் மேற்கொள்ள விரும்பும் பயிற்சி நெறியை குறிப்பிடவும்.

உதவிப் பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(779)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# நகல்திட்ட யோசனைகள்.

# தமிழீழ வி. மு. நிராகரிப்பு!

(சென்னை)

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசு வகுத்த நகல் திட்ட யோசனைகளை தமிழீழ விடுதலை முன்னணி நிராகரித்துவிட்டது.

இந்த யோசனைகளில் கூறப்பட்டுள்ளதுபோல கிழக்கு மாகாணம் என்றும், வடக்கு மாகாணம் என்றும் தனித் தனி மாகாணங்களை அமைப்பது தமிழர் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகள் ஒரே தமிழ் மாவட்டமாக செயல்படுவதைப் பாதிக்கும் என்றும், இரு தனித்தனி மாகாண சபைகளையும் மத்தியிலுள்ள சிங்கள அரசு கட்டுப்படுத்தமுடியும் என்றும், இந்த மாகாணசபைகளுக்கு அளிக்கும் அதிகாரங்களும் மிகவும் குறைவாக உள்ளதென்றும் மேற்படி முன்னணி விடுத்துள்ள செய்திக் குறிப்பு கூறுகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் 3 லட்சத்துக்கும் அதிகமான சிங்களவர்கள் தமிழர் பெரும்பான்மையாகவுள்ள பகுதிகளில் குடியமர்த்தப்பட்டுவிட்டதால் இன அடிப்படையில் பகுதிகளைப் பிரிக்கும் யோசனைகள், 1946 ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இருந்தால்தான் பலனுள்ளவையாக இருக்குமெனறு அந்தச் செய்திக் குறிப்பு மேலும்தெரிவிக்கிறது. (பி)

## மற்றுமொரு ‘வானொலி’

(யாழ்ப்பாணம்)

‘ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ. பி. ஆர் எல். எவ்.] பரீட்சார்த்த வானொலி ஒலிபரப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த ஒலிபரப்பை தினசரி பிற்பகல் 3 மணிதொடக்கம் 3-30 வரை சிற்றலை [எஸ் டபிள்யு.] 41 எம் 7 005 கே எச். இஸட். 7 005 எம். எச் இஸட் வரிசையில் கேட்கக் கூடியதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீவேங்கடேசர் 4-ம் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேசர் 4-ம் திருவிழாவான இன்று பகல், சுவாமி தேவியருடன் உள்வீதி வலம் வருவதோடு மாலை 6 மணிக்கு சுவாமி அநுமார்வாகனத்தில் பக்தர்ட்கு அருளும் பாலிப்பார். (ச)

## யாழ். ஆஸ்பத்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மருந்துவகைகளுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

‘எக்ஸ்ரே’ படம்பிடிக்கும் போட்டோப் பிரதிகளின்மைபால் நெருக்கடியான ஒருநிலை நிலவுகிறது

கொழும்பிலிருந்து ரயில் மூலம் இப்பிரதிகள் கொண்டு வரப்பட்டு அநுராதபுரம் ரயில் நிலையத்தில் முடங்கிக்கிடக்கிறன.

அநுராதபுரம் சென்று அப் பிரதிகளை எடுத்துவருவதற்கும் மரவாச்சிப் பகுதியில் இடம் பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களால்அங்குசெல்வதற்கு எவரும் முன்வருகிறார்களில்லையாம்.

அதுபோல ‘பிராணவாயு [ஒக்ஸிஜன்] சிலிண்டர்களுக்கும் யாழ். ஆஸ்பத்திரியில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சைகளுக்குப் பெரும்பாதிப்பு ஏற்படக்கூடாதென்பதற்காக போக்குவரத்துக் கஷ்டங்களுக்குமத்தியில் அநுராதபுரத்திலிருந்து பெருமுயற்சியின்பேரில ஒக்ஷிஜன் சிலிண்டர்களைக் கொண்டுவந்ததாக ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியன் தெரிவிக்கிறார்.

இந்த இக்கட்டான நிலையில் கடந்த ஞாயிறு இரவு சத்திரசிகிச்சை நிலையத்துக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் ஒரு ‘ஒக்ஸிஜன் சிலிண்டர், ‘ஒக்ஸிஜன் மாஸ்க் (முகமூடி)’ மற்றும் சில ரியூப் வகைகளை கொள்ளை அடித்துச் சென்றதாகவும். அங்கு கடமையிலிருந்த உத்தியோகத்தர்களும் வேறு ஒரு குழுவினரும் தடுத்தபோதிலும் அவர்கள் செவிசாய்க்கவில்லை என்றும் தெரிவித்த வைத்திய அதிகாரி, இக்கொள்ளைச் சம்பவத்தால் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட 80 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ‘ஈ எம். ஓ’ இயந்திரங்களை அரசாங்கம் இவ் ஆஸ்பத்திரிக்கு வழங்க மறுப்பதாகவும் சொன்னார்.

ஆஸ்பத்திரி நலன் கருதி கொள்ளையடிக்கப்பட்ட ‘ஒக்ஸிஜன் சிலிண்டரை’ மீண்டும் ஒப்படைக்குமாறு வைத்திய அதிகாரி சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### முருகேசு தங்கராசா

முருகேசு தங்கராசா காலமானார்; இவர் காரை நகரைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் யாழ்ப்பாணம் வெள்ளாந்தெரு இல: 74, சிவன்பண்ணை வீதியில் வசித்தவரும், உலகநாயகியின் அன்புக் கணவருமாவார். ஈமக்கிரியைகள் கீல்லூன்றி மயானத்தில் இன்று 18-9-85 காலை 10 மணிக்கு நடைபெறும்.

கி; இராசரத்தினம்,
இல; 74, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(787)

## மரண அறிவித்தல்

### நீக்கிலாப்பிள்ளை பெனடிற்யோசேப்

வவனியா இறம்பைக் குளத்தைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை பெனடிற் யோசேப் [இளைப்பாறிய வன பரிபாலன அதிகாரி] காலமானார். அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும், அருட்திரு பெனடிற் தேவராசா, பவளம், வில்வராசா (கலால்நிலைய பொறுப்பாளர் ஊர்காவற்றுறை), ஆனந்தராசா [கிராமசேவையாளர், சேமமடு], சாந்தகுமாரி ஆகியோரின் தந்தையும். றொபேட் (துறைமுக அதிகார சபை, கொழும்பு). யோகினி, தவரத்தினம், யோகேஸ்வரன் [சவுதி] ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 18 திகதி இன்று புதன்கிழமை மாலை 3-45 மணியளவில் இறம்பைக்குளம் சேமக்காலையில் நடைபெறும்.

[785]

## ஈ.வெ.ரா.பெரியார் 107வது பிறந்தநாள்

### 107பேர் இரத்த தானம்

(சென்னை)

ஈ. வெ. ரா. பெரியாரின் 107வது பிறந்த தினத்தை யொட்டி நேற்று தமிழ்நடு முழுவதும் விழாக் கொண்டாடப்பட்டது.

பெரியாரின் 107 வது பிறந்த நாளைக் குறிக்கும்வகையில் 107 திராவிடக்கழகத் தொண்டர்கள் இரத்த தானம் செய்தார்கள். (பி)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று மாலை நாலு மணியளவில் ‘‘ஈழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை பல்கலைக்கழக உண்ணாவிரதக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## யாழ்.பல்கலைக்கழக உபவேந்தரை தமிழர் ஆசிரியர் சங்கம்

# இன்று சந்திக்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தரையும் பீடாதிபதிகளையும் இன்று நண்பகல் வெளிவாரிப் பட்டப்படிப்பு தொடர்பாக கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக வட - கிழக்குமாகாணங்களில் இருந்து பேராதனை பல்கலைக் கழகத்துக்கு வெளிவாரிப் பட்டப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பலர் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையில் யாழ். பல்கலைக் கழகம் வெளிவாரிப் பரீட்சைகளை தொடக்க வேண்டியதன் அவசியத்தை இச் சந்திப்பின்போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எடுத்து விளக்கும் என்று பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

கலை, விஞ்ஞானம், வர்த்தகம் போன்ற துறைகளில் வெளிவாரிப் பரீட்சைப் பகுதியைதொடக்குவதுடன், மனையியல் போன்ற பாடங்களில் டிப்புளோமா வகுப்புகளையும், சைவப்புலவர், வித்துவான் ஆகிய பட்டங்களுக்கான முழுநேர வகுப்புக்களையும் ஆரம்பிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இச் சந்திப்பின்போது சங்கீத, நடன, நாடகத்துறை பட்டப்படிப்புக்களை ஆரம்பிப்பதோடு இப்பாடங்களை பட்டப்படிப்புக்கு ஒரு பாடமாக அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## ஈழத்து அநாதைச்சிறுவனை; கலைஞர் வளர்க்கிறார்

[சென்னை]

இலங்கையிலிருந்து அகதியாக தமிழ்நாடு சென்றுள்ள ஓர் அநாதைச் சிறுவனை தி. மு. க தலைவர் திரு மு கருணாநிதி தமது பொறுப்பில் வளர்க்கவுள்ளார்.

சென்னையில் நடந்த கூட்டமொன்றில் அச்சிறுவனை அறிமுகப்படுத்திப் பேசியபோது கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. கே. அன்பழகனுக்கு அண்ணா விருதும், முன்னாள் மாநில அமைச்சர் திரு பி நாராயணசாமிக்கு பெரியார்விருதும், கவிஞர் பொன்னிவளவனுக்கு கலைஞர் விருதும் கலைஞர் கருணாநிதியினால் வழங்கப்பட்டன.

## பஸ்சேவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூர் சேவை எதுவும் நடைபெறவில்லை. காரைநகர் டிப்போவிலிருந்தும் பருத்தித்துறை டிப்போவிலிருந்தும் ஒரு சில சேவைகள்மட்டுமே நடைபெற்றன டீசல்கொள்ளை, பஸ் கடத்தலைத் தொடர்ந்து பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ம)

## மன்னார்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செட்டிகுளம் பகுதியில் தீவிரவாதிகளால் ரயில் பாதை சிர்குலைக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த ரயில் அநுராதபுரத்துடன் நிறுத்தப்பட்டுள்ளதாக இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## இலங்கை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டம் காணவைத்துள்ளதை, தாம் அவர்களைச் சந்தித்தபொழுது நன்கு உணரக் கூடியதாக இருப்பதாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

‘‘இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் தமிழ்நாட்டு மக்களை ஆத்திரமூட்டச் செய்துள்ளன எனினும் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி எடுக்கும் முடிவை அவர்கள் ஆதரிக்கின்றனர்.

‘‘திருமலைச் சம்பவங்கள் தமிழ்நாட்டு மக்களை ஆத்திரமடையச் செய்துள்ளன

‘‘திரு எஸ் ஏ பாலசிங்கம் விஷயத்தில் தமிழக எதிர்க்கட்சிகள் நடவடிக்கைகளைமேற்கொண்டாலும் பிரதமர் திரு ராஜீவ்காந்தி, தமிழக முதல்வர் எம். ஜி ராமச்சந்திரன் எடுத்த முயற்சிகள் காரணமாக அவை தோல்வியடைந்தன

‘‘தமிழக முதல்வர் எம் ஜி. ஆர் அழைப்பின்பேரில அவரைச்சந்தித்தேன்.

‘‘பஞ்சாப் அஸாம், மகாராஷ்டிரா பிரச்னைகளில் தீர்வு காணப்பட்டதுபோல், இலங்கைத்தமிழ் மக்கள் பிரச்னை தொடர்பாகவும்பிரதமர் திரு ராஜீவ் காந்தி வெற்றிகரமான தீர்வு எடுப்பார் எனறு தமிழ் நாட்டு மக்கள் கருதுகின்றனர் இதில் எனக்கும் நம்பிக்கை உண்டு.’’ [மா]

## இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

நீதியான கோரிக்கையை முன்வைத்து வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வரும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக இன்று புதன்கிழமை சங்கானைவாழ் பொது மக்கள் ஒருநாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

சங்கானை ஸ்ரீஞானவயிரவர் ஆலய முன்றலில் நடைபெறவிருக்கும் இவ்வுண்ணாவிரதத்தையொட்டி மாலை 4 மணியளவில் மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் பிரதிநிதிகள். பல்கலைக் கழக மாணவர்களின் கருத்தரங்கொன்றும் நடைபெறவுள்ளது. [ச]

## அலங்கார உற்சவம்

[யாழ்ப்பாணம்]

ஏழாலை பூதவராயர்கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதித் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது அலங்கரிக்கப்பட்ட சோடனைகளுடன் சுவாமி வீதிவலம் வருவார் விசேஷ மேளக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது [மா]

## மன்னாரில் மின்கம்ப தண்டனை

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் நேற்றுக்காலை இனந்தெரியாத இளைஞர்களினால் ஒருவருக்கு மின்கம்ப மரணதண்டனை வழங்கப்பட்டது.

மற்றும் ஐந்து நபர்கள் மின்கம்பத்தில் கயிறுடன் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## விநாயகர் சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சாயி இல்லத்தில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா மண்டலி மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் விநாயகர் சதுர்த்தி அனுஷ்டிக்கப்படும்.

இப்பத்திரிகை ‘‘ஈழநாடு’’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில்/ மேற்கு வீதி. 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24126